நல்ல குழந்தை

பேராசிரியர் :

மயிலை சிவ-முத்து

எழுதியது

மாணவர் மன்ற வெளியீடு

17, இரத்தின முதலி தெரு, சென்னை-1.

பதிப்புரிமை] [விலை 50 ந.பை.

வெளியீடு : 18

பதிப்புரிமை ஆசிரியர்க்கு.

Jyothi Printers, Madras-1

குறிப்பு

இச் சிறு புத்தகத்திலே ‘**நல்ல குழந்தை** எனக் குறிக்கப்படுபவர் சைவசமயாசாரியருள் ஒருவராய **திருஞான சம்பந்தமூர்த்திகளே** யாவார்.

பழைய பெரியோர்களது சரிதங்களை மிகச் சிறு குழந்தைகளும் வாசித்துணரும் தன்மையில் மேல்நாட்டார் பெரிதும் எழுதி வெளியிடுகின்றனர். அம் முறையைத் தழுவி இஃது எழுதப்பட்டது. மிகவும் எளிய சொற்களாலே கடின சந்திகள் சிறிதும் இன்றி இஃது எழுதப்பட்டிருத்தலின் இளஞ் சிறுவர்கள் இதனை இன்புடன் வாசித்தல் கூடும்.

இம்முறையிலே பல புத்தகங்கள் எழுதி வெளியிட எண்ணியிருத்தலின் இதனைப் பெரியோர் பலரும் ஆதரிக்க வேண்டுகிறேன்.

—ஆசிரியர்.

நல்ல குழந்தை

1

சீர்காழி என்னும் ஊரிலே பிராமணர் ஒருவர் இருந்தார். அவர் மிகவும் நல்லவர்; கடவுளின் மீது பக்தி உள்ளவர். அவர் விபூதி இடுபவர்; ஆதலால், அவர் தினந்தோறும் சிவன் கோயிலுக்குப் போய் வருவார்.

அந்தப் பிராமணர் ஒரு குறையும்

இல்லாமல் சுகமாக வாழ்ந்து வந்தார்; ஆனால், அவருக்குக் குழந்தை மட்டும் பிறக்கவே இல்லை. ஆதலால், அவர் கோயிலுக்குப் போகும் போதெல்லாம், "சுவாமி, எனக்கு ஒரு நல்ல ஆண் குழந்தை வேண்டும்," என்று கடவுளை வேண்டி வருவார்.

சில நாள் கழித்து அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை மிகவும் அழகாக இருந்தது. தாயாரும், தகப்பனாரும் அந்தக் குழந்தையைக் கண்டு மிகவும் சந்தோஷப்-

பட்டார்கள். அக் குழந்தை நாளுக்கு நாள் அழகாக வளர்ந்து வந்தது.

சில நாட்களில் அக் குழந்தை தவழ ஆரம்பித்தது. பிறகு, அது மெதுவாக நடக்கவும் கற்றுக்கொண்டது.

அந்தக் குழந்தை மிகவும் புத்திசாலி. மற்றக் குழந்தைகளைப் போல் அது ஒருவருக்கும் தொந்தரவு கொடுத்ததில்லை; வீணாக அழுததும் இல்லை. அந்தக் குழந்தைக்குக் கடவுளின்மீது மிகவும் ஆசை. ஆதலால் அது சுவாமியின் பெயரைச் சொன்னால் கும்பிடும்.

அது, அச் சிறுவயதிலேயே பெரியோர்களிடம் மரியாதையாய் நடக்கும். ஆதலால், அவ்வூரில் உள்ள எல்லோருக்கும் அக் குழந்தைமீது ஆசை.

2

குழந்தைக்கு வயது மூன்று ஆயிற்று. ஒரு நாள் தகப்பனார் வழக்கம் போல் கோயிலுக்குப் புறப்பட்டார். அப்போது அக் குழந்தை, “அப்பா, நானும் கோயிலுக்கு வருகிறேன்,” என்று சொல்லிற்று. ஆதலால், தகப்ப-

ஞர் அக் குழந்தையைத் தூக்கிக்-கொண்டு கோயிலுக்குப் போனூர்.

உடம்பு குளிக்காமல் கோயிலுக்குப் போகக் கூடாது அல்லவா? ஆதலால், அந்தப்பிராமணர் முதலில் குளக்கரைக்-குச்சென்ருர். அவர் அக் குழந்தையைக் குளத்தின் படிக்கட்டின்மீது உட்கார வைத்தார்; பிறகு குளத்தில் இறங்கிக் குளிக்க ஆரம்பித்தார். அப்போது, அக்குழந்தை அழாமல் தகப்பஞரையே பார்த்துக்கொண்டு இருந்தது.

குளிக்கும்போது சிலர் மூக்கைப் பிடித்துக்கொண்டு தண்ணீரில் முழுகி மந்திரம் சொல்லுவார்கள். அந்தப் பிராமணரும் அன்று அவ்விதம் செய்ய ஆரம்பித்தார். அப்போது அந்தக் குழந்தை, தகப்பஞரைக் காணுமல் சிறிது நேரம் விழித்தது; பிறகு,

நான்கு பக்கமும் சுற்றிப் பார்த்தது. அங்கே ஒருவரும் இல்லாததால், அது கோயிலின் கோபுரத்தைப் பார்த்து, "அம்மா, அப்பா," என்று அழ ஆரம்பித்தது.

தகப்பனார் தண்ணீருக்குள் இருந்ததால் குழந்தை அழுவது அவருக்குக் கேட்கவில்லை; அந்தக் குழந்தை எப்போதும் கடவுளை வணங்கும் நல்ல குழந்தை அல்லவா? ஆதலால், கடவுள் அம்மையும், அப்பனுமாக அந்தக் குழந்தையின் எதிரிலே வந்தார்; அதை மடியின் மீது வைத்துக்கொண்டார்; ஒரு பொன் கிண்ணத்தில், அதற்குப் பால் கொடுத்தார்.

கடவுளைக் கண்டதும் குழந்தைக்கு மிகவும் சந்தோஷம் உண்டாயிற்று. அவர் கொடுத்த பாலைக் குடித்ததும் அதற்குப் பக்தி அதிகமாயிற்று;



அறிவும் வளர்ந்தது. ஆதலால் அது அழாமல் கடவுளையே நினைத்துக்கொண்டு இருந்தது.

தகப்பனார் பூஜை முடித்துக்கொண்டு குழந்தையின் அருகே வந்தார். அப்போது, அந்தக் குழந்தையின் வாயில் பால் வடிந்து இருந்தது. கடவுள் வந்த விஷயம் தகப்பனாருக்குத் தெரியாது அல்லவா? அக் குழந்தை எவர் இடத்திலோ பால் குடித்துவிட்டது என்று தகப்பனார் எண்ணினார்.

ஆதலால், அவருக்கு மிகவும் கோபம் வந்து விட்டது. அவர், அருகே இருந்த ஒரு சிறு கொம்பினை எடுத்துக்கொண்டு, “உனக்குப் பால் கொடுத்தது

யார்?," என்று அக் குழந்தையை அதட்டிக் கேட்டார்.

அதற்கு அக் குழந்தை, "எனக்குப் பால் கொடுத்தவர் அதோ இருக்கின்றார்," என்று மேலே கையை உயர்த்திக் காட்டிக் கடவுளின் மீது அழகான பாட்டுக்கள் பாட ஆரம்பித்தது.



3

அக் குழந்தைக்கோ எழுத்துக் கூட்டி வாசிக்கவும் தெரியாது. அது படித்த பெரியோர்களைக் காட்டிலும் அழகாகப் பாடுவதைக் கண்டு தகப்பனார் ஆச்சரியம் அடைந்தார்.

மூன்று வயதுள்ள குழந்தை நன்றாகப் பேசுவதே அருமை. பாடுவதோ மிகவும் அருமை. அச்சிறு குழந்தை எந்தப் புத்தகத்தையும் படிக்காமல், தானே கட்டிப் பாடிற்று என்றால்— அது மிகவும் ஆச்சரியம் அல்லவா! அக் குழந்தை பாடிய பாட்டுக்களில் ஒன்று இது. இதைப் படித்துப் பாருங்கள்.

தோடுடைய செவியன்; விடைஏறி; ஓர் தூவெண் மதி சூடி;
காடுடைய சுடலைப்பொடி பூசி; என் உள்ளம் கவர் கள்வன்;
ஏடுடைய மலரான் முனை நாள் பணிந்து ஏத்த அருள் செய்த,
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே!"

அக் குழந்தை இவ்விதம் பாடிய-திலை அதற்குப் பால் கொடுத்தவர் கடவுளே என்பதைத் தகப்பனார் தெரிந்துகொண்டார். அப்போது அவர் மிகுந்த சந்தோஷத்தால் குழந்தை போல் குதித்தார்; கை கொட்டிச் சிரித்தார்; அக் குழந்தையைத் தோளில் தூக்கிக் கொண்டு கூத்தாடினார்; அங்கு வருபவர்களுக்கெல்-

லாம் இந்த அதிசயத்தைச் சொல்லிச் சொல்லிச் சந்தோஷப்பட்டார். அக் குழந்தையைப் பார்ப்பதற்கு மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து சேர்ந்தார்கள்.

பிறகு, தகப்பனார் அக் குழந்தையைத் தோளில் தூக்கிக்கொண்டு கோயி-

கோயிலுக்குச் சென்ருர். கடவுளைக் கண்டதும் அக் குழந்தை தாளம் போட்டுப் பாட ஆரம்பித்துவிட்டது.

கடவுளைக் கும்பிட்டதும் தகப்பனுர் அக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினுர். வழியில் வருவார் போவார் எல்லோரும் அக் குழந்தையின் காலில் விழுந்து வணங்கினுர்கள். ஒவ்வொரு வீட்டிலும் உள்ள பெண்கள் அக் குழந்தைக்கு ஆலம் சுற்றித் திருஷ்டி கழித்தனர். அன்று முதல் எல்லோரும் அக் குழந்தையை **ஞானசம்பந்தர்** என்று அழைக்க ஆரம்பித்தனர். ஞானசம்பந்தர் என்ருல் மிகவும் அறிவு உடையவர் என்று பொருள்.

4

அன்று முதல், சிறு குழந்தையாகிய ஞானசம்பந்தர் பல கோயில்களுக்குச் சென்றுவந்தார். அவர் மிகவும் சமீபத்தில் உள்ள கோயில்கட்குக் காலினால் நடந்தே செல்லுவார். மிகவும் தூரமாக இருந்தால், அவர் தந்தையார் அவரைத் தோளின்மீது தூக்கிச் செல்லுவார்.

ஒரு நாள் ஞானசம்பந்தர் சீர்காழிக்கு அருகே உள்ள ஓர் ஊருக்குச் சென்றார். அவர் அங்கே இருக்கும் கோயிலுக்குப் போய்க் கையினால் தாளம் போட்டுக்கொண்டு பாட்டுப் பாடினார். அப்போது, அவர் கைகள் சிவந்துவிட்டன. உடனே கடவுள்

அவருக்குப் பொன்னல் செய்த தாளம் ஒன்று கொடுத்தார்.

மற்ருெரு நாள் ஞானசம்பந்தர் கடவுளை வணங்கச் சீர்காழிக்கு மிகவும்

தூரத்திலே இருக்கும் ஓர் ஊருக்குக் காலி-ேைல் நடந்தே செல்ல விரும்பிஞர். அவர் அவ்விதம் நடந்து செல்லும் போது அவருக்குக் கால்கள் இரண்டும் நொந்தன. அவரால் ஓர் அடியும் எடுத்து வைக்க முடியவில்லை. அப்போது, கடவுள் அவருக்கு முத்திஞல் செய்த பல்லக்கு ஒன்றைக் கொடுத்து அனுப்பிஞர். ஞானசம்பந்தர் அதில் ஏறிக்கொண்டு அவ்வூரை அடைந்து கடவுளை வணங்கிஞர்.



நீங்கள் பல்லக்கினை எப்போதாவது பார்த்திருக்கின்றீர்களா? படத்தைப் பாருங்கள். முன்காலத்தில் மிகவும் பணக்காரர்கள் இதில்தான் ஏறிச் செல்லுவார்கள்.

ஞானசம்பந்தர் இவ்விதம் பல ஊர்களுக்குப் பல்லக்கில் ஏறிச் சென்று கடவுளைப் பாடிக் கும்பிட்டு வந்தார். அவருடன் பல பெரியோர்கள் கூட்டம் கூட்டமாகச் சென்றார்கள்.



ஒரு நாள் ஞானசம்பந்தர் கடவு-
ளைக் கும்பிடுவதற்காக ஓர் ஊருக்குச்
சென்றுகொண்டு இருந்தார். அப்போது
வெயில் அதிகமாக இருந்தது. அதனால்
கடவுள் அவருக்கு முத்தினால் செய்த
பந்தல் ஒன்று கொடுத்தார். நான்கு
பேர் அதைக் குடைபோல் தூக்கிச்
சென்றார்கள். ஞானசம்பந்தர் அப்-
பந்தலின் கீழே பல்லக்கில் சென்றார்.

5

ஞானசம்பந்தருக்கு வயது ஐந்து ஆயிற்று. அப்போது, அவருக்குப் பூணூல் கலியாணம் செய்தார்கள். பூணூல் கலியாணம் என்றால் உங்களுக்குத் தெரியுமா? உங்கள் உபாத்தியாயரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

குழந்தை ஞான-சம்பந்தருக்கு வயது ஐந்துக்கு மேல் ஆகிவிட்டது. அப்போது அவர், தகப்பனார் உதவி இல்லாமலே தனியே செல்ல ஆரம்பித்தார். ஆனால், கடவுளிடம் பக்தியுள்ள பல பெரியோர், ஞானசம்பந்தர் செல்லும் ஊர்களுக்கெல்லாம் கூட்டம் கூட்டமாக அவரைத் தொடர்ந்து சென்றார்கள்.

ஞானசம்பந்தர் ஒரு நாள் மதுரை என்னும் பெரிய பட்டணத்துக்குச்

சென்ருர், அந்த ஊரில் உள்ள மக்களுக்குக் கடவுள் பக்தி கொஞ்சமும் இல்லை. அவ்வூர் அரசரும் கடவுள் பக்தி இல்லாதவர். அதனல் ஞானசம்-

பந்தர் அங்கே வந்தது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் ஞானசம்பந்-தர் தங்கியிருந்த இடத்தில் நெருப்பு வைத்தார்கள். அப்போது ஞானசம்-

பந்தர், கடவுள் மீது பாட்டுப் பாடினர். உடனே அந்த நெருப்பு அவிந்து விட்டது. கடவுள் பக்தி இல்லாத அந்த

அரசருக்கும் அப்போதே காய்ச்சல் வந்தது.

அரசர் காய்ச்சலினல் மிகவும் துன்பப்பட்டார். எத்தனையோ பேர்கள் வந்து அந்தக் காய்ச்சலை நீக்க முயற்சி

செய்தார்கள். ஒருவராலும் முடியாமல் போய்விட்டது. பிறகு ஞானசம்பந்தர் அங்கே வந்தார். அவர் கடவுளின்மேல் பாட்டுப் பாடி, அந்த அரசர் உடம்பை விபூதியினால் தடவினார். உடனே அக் காய்ச்சல் நீங்கியது.

அன்றுமுதல் அரசர் கடவுள் பக்தி உடையவராய் இருந்தார். அங்கே இருந்த மக்களில் பலர்க்கு அப்போ-தும் கடவுள் மீது பக்தி உண்டாக வில்லை. அவர்கள் ஞானசம்பந்தரைச் சில ஆச்சரியமான காரியங்கள் செய்து காட்டச் சொன்னார்கள். அவ்விதமே அவர், பனை ஓலையிலே கடவுள்மீது பாட்டுக்கள் எழுதி எரியும் நெருப்பிலே போட்டார். அது எரிந்து போகாமல் அப்படியே இருந்தது. பிறகு அவர்கள், கடவுளின்மீது பாட்டு எழுதி அதை

ஆற்று வெள்ளத்திலே போடச் சொன்-
ஞர்கள். ஞானசம்பந்தர் அவ்விதமே
செய்தார். அந்த ஓலை ஆற்றில்
அடித்துக்கொண்டு போகாமல் அதற்கு
எதிராகச் சென்றது.

அவைகளைக் கண்டதும் அந்த
ஊர் மக்களுக்குக் கடவுள் பக்தி உண்-
டாயிற்று. ஞானசம்பந்தர்மீதும் அவர்-
களுக்கு மிகவும் அன்பு உண்டாயிற்று.

பிறகு ஞானசம்பந்தர் வேறு பல
ஊர்களுக்குச் சென்று கடவுளைத்தொழு-
தார். அவர் ஓர் ஊருக்குப் படகில் ஏறிச்
செல்லவேண்டி இருந்தது. அப்போது
அவர் அங்கே இருந்த படகில் ஏறிக்
கொண்டார்; பல பெரியோர்களையும்
அதில் ஏற்றிக்கொண்டார். பிறகு கடவு-
ளின்மீது பாட்டுப் பாடினர். உடனே

அப்படகு, ஒருவரும் ஓட்டாமலே புகைக் கப்பல் போல் வேகமாக ஓடிற்று.

6

ஞானசம்பந்தருக்கு ஏறக் குறைய வயது பதினாறு இருக்கும். அதுவரையில் அவர் செய்த ஆச்சரியமான காரியங்களுக்கு அளவில்லை. அவைகளை யெல்லாம் நீங்கள் பெரியோர்கள் ஆகும்போது பெரிய புத்தகங்களில் படிப்பீர்கள்.

பிறகு, அவர் பல **ஊ**ர்களுக்குச் சென்று கடவுளை வணங்கிக்கொண்டு மயிலாப்பூர் என்னும் **ஊ**ருக்கு வந்தார்.

அவ்வூரிலே அப்போது ஒரு பணக்காரச்செட்டியார் இருந்தார். அவர் மிகவும் கடவுள் பக்தியுடையவர். அவருக்குப் பன்னிரண்டு வயதுள்ள ஒரு பெண் இருந்தாள். அப்பெண்ணும் கடவுள் பக்தி உடையவள். அவள் ஒரு நாள்

பூப் பறிக்கத் தோட்டத்துக்குச் சென்றனள். அப்போது பாம்பு கடிக்க அந்தப் பெண் இறந்துவிட்டனள்.

பெண் இறந்துவிட்டதால் செட்டி-யார் மிகவும் வருந்தினர். பிறகு அவர் அந்தப் பெண்ணின் எலும்பை ஒரு பானையிலே போட்டுப் பத்திரமாய் ஓர் இடத்தில் வைத்தார்.

ஞானசம்பந்தர் அங்கேவந்தபோது செட்டியார் நடந்ததை யெல்லாம் அவருக்குச் சொன்னார். ஞானசம்பந்தர் எலும்பைப் பானையோடு கோயிலுக்கு எதிரிலே வைக்கும்படி கட்டளையிட்டார்.

அப்படியே அவர்கள் அதைக்கொண்டு-வந்து வைத்தார்கள். அப்போது, அவர் கடவுள் மீது சில பாட்டுக்கள் பாடினர்.

உடனே, அந்தப் பெண் பானையில் இருந்து வெளியே வந்தனள்.

இந்த அதிசயத்தைப் பார்ப்பதற்காக மக்கள் அப்போது கூட்டம் கூட்டமாக வந்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். பிறகு, ஞானசம்பந்தர் வேறு ஓர் ஊருக்குச் சென்றுவிட்டார்.

7

ஞானசம்பந்தர் இவ்விதம் பல ஊர்களுக்கும் சென்று கடைசியில் தங்கள் சொந்த ஊராகிய சீர்காழிக்கு வந்தார். ஞானசம்பந்தர் வருவதைக் கேட்டு அவ்வூரார் எல்லாரும் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். அவர் தாயாரும் தகப்பனாரும் அவரைக் காண ஆசையோடு ஓடி வந்தார்கள்.

சில நாட்கள் சென்றன. ஞானசம்பந்தருக்கு வயது பதினாறு ஆயிற்று. தகப்பனார் அவருக்குத் திருமணம் செய்ய எண்ணினார். சீர்காழிக்குச் சிறிது தூரத்திலே நல்லூர் என்று ஓர் ஊர் இருக்கிறது. அவ்வூரிலே ஓர் அழகான பெண் இருந்தாள். அப்பெண்ணுக்குக் கடவுள் பக்தியும் அதிகம். அப் பெண்ணை, ஞானசம்பந்தருக்குத் திரு-

மணம் செய்துவைக்க அவர் தகப்பனுர் விரும்பினுர். அப்பெண்ணின் தகப்பனுரும் அவருக்குப் பெண் கொடுக்க மிக்க ஆசையோடு முன் வந்தார்.

திருமணம் நல்லூரில் நடப்பதாக ஏற்பாடு ஆயிற்று. திருமணத்திற்கு நல்ல நாளும் குதிர்ந்தது. பெண் வீட்டாரும், பிள்ளை வீட்டாரும் மணவோலை எழுதி ஊர் முழுவதும் தெரிவித்து விட்டார்கள்.

ஞானசம்பந்தருக்குத் திருமணம் என்ருல் அதைச் சொல்லவும் வேண்டுமா? ஆண்களும், பெண்களும், சிறியோரும், பெரியோரும் பல ஊர்களிலும் இருந்து முன்னதாகவே கூட்டம் கூட்டமாக வந்துவிட்டார்கள்.

அப்போது நல்லூரின் அழகினை ஒருவராலும் வருணிக்க முடியாது. எங்-

குப் பார்த்தாலும் பூப் பந்தல்கள், தோரணங்கள், பலவித வர்ணக் கொடிகள் முதலியன காணப்பட்டன. வாழைமரங்கள் வரிசை வரிசையாகக் கம்பங்களில் கட்டப்பட்டு இருந்தன. அவைகளோடு தென்னங் குலைகளும், பாக்குக்குலைகளும் ஈச்சங்குலைகளும், பனங்காய்க் குலைகளும் அழகாகக் கட்டப்பட்டு இருந்தன. மணமகனுர் வரும்போது அவருக்கு ஆலம் சுற்றித் திருஷ்டி கழிப்பதற்காக ஒவ்வொரு வீட்டாரும் பலவித தீபங்களை ஏற்றி வீட்டை அலங்கரித்து வைத்திருந்தனர்.

ஞானசம்பந்தர் மணக் கோலத்துடன் சீர்காழியிலிருந்து மேளதாளங்களும், தாரை தப்பட்டைகளும், மற்றும் பலவித வாத்தியங்களும் கடல் போல் முழங்க முத்துப் பல்லக்கில் ஏறிக் கொண்டு ஊர்வலம் வந்தார்.

அப்போது அவர் பட்டாடை அணிந்தும், உடல் முழுவதும் விபூதி பூசிக்கொண்டும் இருந்தார். அவர் மார்பிலே பலவிதமான பொன் ஆபரணங்களோடு உருத்திராட்சமாலேயும் காணப்பட்டது. அவருக்குப் பின்னும் முன்னும் கணக்கில்லாத அன்பர்கள் கூட்டங் கூட்டமாக வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுள் சிலர் அவருக்குக் குடை பிடித்தார்கள்; சிலர் சாமரை வீசினர்கள்; சிலர் கொடி பிடித்தார்கள்; வேறு சிலர் "ஞானசம்பந்தர் வருகிறூர்—வருகிறூர்," என்று மிகவும் சந்தோஷத்துடன் கூவிக்கொண்டு முன்னே சென்றூர்கள்; மற்றும்சிலர், ''ஞானசம்பந்தர் வாழ்க—வாழ்க," என்று வாழ்த்திக்கொண்டு பின்னே வந்தார்கள்.

8

திருமண மண்டபத்தின் அழகையும் அங்கே நடந்த விசேஷங்களையும் ஒழுங்காகச் சொல்வதற்கு இப்புத்தகம் போதாது. அவ்விதமே திருமணப் பெண்ணின் அழகையும் என்னால் சொல்ல முடியாது.

திருமணப் பெண்ணைப் பார்த்தவர்கள், "ஆ! இப் பெண்ணின் அழகே அழகு," என்றார்கள். திருமணப் பிள்ளையைப் பார்த்தவர்கள், "ஓ! இப் பிள்ளையின் அழகுக்குப் பெண்ணழகு எங்கே!" என்று ஆச்சரியப்பட்டார்கள். இருவரையும் ஒன்றாகப் பார்த்தவர்கள் ஒன்றும் தோன்றாமல் விழித்தார்கள்.

திருமண மண்டபத்தில், எள் விழுவதற்கும் இடம் இல்லாதபடி ஆண்களும் பெண்களும் நிறைந்து இருந்தார்

கள். அங்கு வந்திருந்த எல்லோரும் மிக வும் கடவுள் பக்தி யுடையவர்களாகவே காணப்பட்டார்கள். அவர்கள் பேச்சுக்கள் கடவுள் சம்பந்தமாகவே இருந்தன.

பலவித வாத்தியங்கள் முழங்கத் திருமணம் மிகவும் சிறப்பாக நடந்தது. அப்போது, ஞானசம்பந்தரின் தாயாரும், தந்தையாரும் அளவில்லாத

மகிழ்ச்சியோடு கடவுளை வணங்கி ஞானசம்பந்தரை வாழ்த்தினார்கள். திருமணப் பெண்ணின் தாய் தந்தையரும் அவ்விதமே மகிழ்ச்சி அடைந்தார்கள்.

பிறகு, ஞானசம்பந்தர் திருமணப் பெண்ணைக் கையில் பிடித்துக்கொண்டு கடவுளை வணங்குவதற்குக் கோவிலுக்குச் சென்றார். அப்போது, அங்கே வந்திருந்த அன்பர்கள் எல்லோரும் அவரோடு கோயிலுக்குச் சென்றார்கள்.

9

ஞானசம்பந்தர், பதினாறுவயது ஆன பிறகும் தாய் தந்தையரிடம் மிகவும் மரியாதையாகவே இருந்தார். அவர் இவ்வளவு பெருமைகளை அடைந்தும் சிறிதும் கர்வங் கொண்டதில்லை; ஒருவரிடமும் கோபித்துக் கொண்டதில்லை. அவர் எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பார். அவர் எல்லோரிடத்திலும் மிகவும் அன்போடு பேசுவார்; பெரியோர்களைக் கண்டால் மிகவும் மரியாதை செய்வார்; பக்தர்களைக் கண்டால் கீழே விழுந்து வணங்குவார்; எப்பொழுதும் கடவுளையே மனத்தில் நினைத்துக்கொண்டு இருப்பார்.

இவ்வளவு சிறந்த குணங்களைப் பெற்ற ஞானசம்பந்தர் திருமணச் சந்தடியில் கடவுளை மறந்துவிடுவாரா?

சிறிதும் மறக்கமாட்டார் அல்லவா? ஆதலால் அவர், கோயிலுக்குச் செல்ல மிகவும் ஆசையோடு புறப்பட்டார். அங்கே சென்றதும் அவர் முதலில் தரை-யில் விழுந்து வணங்கினர்; பிறகு இரண்டு கைகளையும் தலைமேல் குவித்து நெடுநேரம் கடவுளை வேண்டினர்; மிகவும் அன்போடு பல அழகான பாட்டுக்களைப் பாடிக் கொண்டே - அக்கோயிலைச் சுற்றிவந்தார். அப்-போது திருமணப் பெண்ணும், ஞான-சம்பந்தரின் தாய்தந்தையரும், மற்றும் உள்ள எல்லோரும் மிகவும் பக்தியோடு கடவுளைக் கும்பிட்டுக்கொண்டு கோயி-லைச் சுற்றி வந்தார்கள்.

பிள்ளைகளே, 'மோட்சம்' என்னும் சொல்லை நீங்கள் எப்போதேனும் கேட்-டிருக்கிறீர்களா? பெரியோர்கள் அடிக்

கடி சொல்லிக் கொள்வதை உங்களில் பலர் கேட்டிருக்கலாம். ஆனால், அது இன்னது என்பது அநேகருக்குத் தெரியாது. 'மோட்சம் என்றால் எப்போதும் இன்பமாக இருக்கும் இடம்,' என்று பெரியோர்கள் சொல்லுகின்றார்கள். அங்கே செல்லுகின்றவர்களுக்கு வருத்தம் சிறிதும் இராது. அங்கே சென்றவர்கள் எப்போதும் இன்பமாக இருப்பார்களாம். ஆனால், அதை எல்லோரும் அடையமுடியாது. மிகவும் நல்லவர்களே அந்த இடத்துக்குச் சென்று இன்பமாக இருப்பார்கள்.

ஞானசம்பந்தர் மிகவும் நல்லபிள்ளை அல்லவா? அவரோடு அங்கே இருந்தவர்களும் மிகவும் நல்லவர்கள் அல்லவா? ஆதலால், கடவுள் ஞானசம்பந்தருக்கும், அவரோடு அங்கே வந்திருந்த

எல்லோருக்கும் மோட்சம் என்னும் அந்தப் பெரிய இன்பத்தைக் கொடுக்க எண்ணினர்.

ஞானசம்பந்தர் கடவுளின்மீது பாடி முடிந்ததும், சிறிதுநேரம் மனத்திலேயே



கடவுளை நினைத்தார். அங்கே இருந்தவர்களும் அவ்விதமே செய்தார்கள். அப்போது அங்கே ஒரு பெரிய வெளிச்-

சம் தோன்றியது. அதே சமயத்தில் அங்கே இருந்த எல்லோருக்கும் தங்களை அறியாமல் ஒருவித ஆனந்தம் உண்டாயிற்று. ஞானசம்பந்தரும், அவர் மனைவியாரும், அவர்தம் அருமைத்தாய் தந்தையரும், மற்றுமுள்ள எல்லோரும் அன்போடு கடவுளை நினைத்துக்கொண்டே அந்த வெளிச்சத்தில் நுழைந்தார்கள். உடனே அவ்வெளிச்சம் மறைந்துவிட்டது. அவர்கள் எல்லோரும் மோட்சம் என்னும் பெரிய இன்பத்தை அடைந்தார்கள்.

ஆதலால் பிள்ளைகளே, நாமும் ஞானசம்பந்தரைப் போல் கடவுளிடம் பக்தியுள்ளவர்களாய், பொய் பேசாமல், கர்வம் கொள்ளாமல், ஒருவருக்கும் தீங்கு செய்யாமல் மிகவும் நல்லவர்களாய் நடந்து வரவேண்டும். அவ்விதம் நடந்-

தால் நமக்குக் கல்வி நன்ருக வரும்; நம்மைக்கண்டு எல்லோரும் சந்தோஷப் படுவார்கள் ; நாம் பெரியவர்களாகி இவ்-வுலகத்தில் நெடுநாள் சந்தோஷமாக வாழ்ந்து முடிவில் மோட்சம் என்னும் பெரிய இன்பத்தையும் அனுபவிக்க-லாம்.